தினத் தந்தி



பயிற்சி முகாமில் மாஜிஸ்திரேட்டு மலர்க்கொடி பேசியபோது எடுத்த படம்.

## திறன் வளர்ப்பு பயிற்சி முகாம்

திருவண்ணாமலை, பிப்.1-

சமூக பாதுகாப்புத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் பாலியல் குற்றத்தில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் குறித்து மாவட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் திருவண்ணாமலை வேங்கிக்காலில் நடைபெற்றது. முகாமிற்கு மாஜிஸ்திரேட்டு கே.மலர்க்கொடி தலைமை தாங்கி பேசினார். மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு எம்.ரங்கராஜன் முன்னிலை வகித்தார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் க.திருமாவளவன் வரவேற்றார்.

முகாமில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் க.திருமாவளவன், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர் ஆர்.செழியன், குழந்தைகள் நலக்குழுத் தலைவர் கே.சதீஷ், வக்கீல் எம்.ஜெயவேல், சைல்டு லைன் (1098) திட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பயிற்சி முகாமில் 60-க்கும் மேற்பட்ட காவல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் எம்.நாகராஜன் நன்றி கூறினார்.